செய்தி வெளியீடு எண்: 194 நாள்: 28.02.2011

## தமிழ் நாடு அரசு செய்தி வெளியீடு

## வணிக வரித் துறை
## மதிப்புக் கூட்டு வரி
## வணிகர்கள் இணைய தளம் மூலமாக மாதாந்திர நமூனாக்களை சமர்ப்பிக்க புதிய வசதி அறிமுகம்

வணிக வரித்துறையில் மாதாந்திர நமூனாக்களை இணைய தளம் மூலம் சமர்ப்பிக்கும் வசதி, கடந்த அக்டோபர் 2007 முதல் அமல்படுத்தப்பட்டது.

வணிகர்கள் தங்கள் நமூனாக்களை இணைய தளத்தினுள் செல்லாமலே, முதலில் தங்களது கணினி மூலம் தயார் செய்து பின்னர், இணைய தளம் மூலம் ஏற்றம் செய்யும்(**upload**) வசதி தற்பொழுது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது (Off line mode). இந்த வசதியை பெறுவதற்கு வணிகர்கள் தங்கள் வணிக வரி அலுவலகங்களில் இருந்து மென்பொருள் குறுவட்டு (CD)–யை பெற்றுக் கொண்டு, அதை தங்கள் கணினியில் நிறுவிக் கொண்டு இந்த சேவையை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வணிக வரி ஆணையருக்காக,

வெளியீடு: –

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.